விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 வைகாசி 7 நம்மான் 11 இதழ் 99
யாழ்ப்பாணம் புதன்கிழமை 21-5-1986

● இலங்கைத் தமிழர் கொலை:

## "மத்திய அரசு தாமதமின்றி நடவடிக்கையில் ஈடுபடவும்"

### ராஜீவுக்குக் கருணாநிதி அவசர தந்தி

[சென்னை]

"இலங்கைத் தமிழ்மக்கள், ஜெயவர்த்தன அரசினால் படுகொலை செய்யப்படும் நிலைமை உடனடியாகத் தடுத்து நிறுத்தப்படவேண்டும்" என்று தி. மு. க. தலைவரும், தமிழீழ ஆதரவாளர் அமைப்பின் தலைவருமாகிய திரு மு. கருணாநிதி இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு அவசர தந்தியொன்றில் தெரிவித்துள்ளார்.

இது விஷயத்தில் இந்திய மத்திய அரசு இனிமேலும் அசிரத்தைப் போக்கைத் தொடராது காலதாமதமற்ற நடவடிக்கையில் ஈடுபடவேண்டும் என்றும் அத்தந்தியில் கோரப்பட்டுள்ளது.

#### வீரமணி வேண்டுகோள்

இதேவேளை திராவிடக் கழகப் பொதுச்செயலாளர் திரு. வீரமணி பிரதமர் ராஜீவ்காந்திக்கும் வெளியுறவு அமைச்சர் திரு சிவ்சங்கருக்கும் அனுப்பிவைத்துள்ள அவசரச் செய்தியில் "இலங்கை இனப்பிரச்னைத் தீர்வினுக்குப் பேச்சுவார்த்தையில்காலத்தை வீணாக்காமல் மத்திய அரசு உகந்த நடவடிக்கையை நேரடியாக எடுக்கவேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த மூன்று தினங்களாக அப்பாவித் தமிழ்மக்கள் படு

[5ம் பக்கம் பார்க்க]

● தொடர்ந்து பதற்றம்

# யாழ். நகரில் நேற்றும் விமானக் குண்டு வீச்சு!

### மக்கள் குடிபெயர்ந்தனர்; கடைகள் மூடப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

நேற்றும் யாழ். நகரில் விமானக் குண்டுவீச்சு இடம்பெற்றது. இதனையடுத்து நகரில் பலத்த பதற்றம நிலவியது. குடிநெருக்கமான கொட்டடிப் பகுதிமக்கள் தமது இல்லங்களை விட்டு வெளியேறினர்.

நகரின் கடைகளிலிருந்து பொருட்களை உரிமையாளர்கள் எடுத்துச் சென்றனர்.

படையினருக்கும் போராளிகளுக்குமிடையில் குடாநாட்டில் பல இடங்களில் தொடர்ந்து போர் நடைபெற்று வருகிறது.

யாழ் நகரில் நேற்றுக்காலை போர் விமானங்கள் குண்டு வீசின. இதனால் நகரில் பெரும் பதற்றம் ஏறபட்டது.

நேற்றுக்காலை 9 மணியளவில் இரு பொம்பர் விமானங்களும இருஹெலிகொப்டர்களும் நகரைச்சுற்றிவட்டமிட்டன.

இப்போர் விமானங்கள் நகரில் மூன்று குண்டுகளை வீசின.

பஸ்நிலையத்திலும் சத்திர சந்தியிலும் குளமொன்றிலும் இக்குண்டுகள் விழுந்தன.

கடந்த நான்கு தினங்களாக ஆயுதப்படையினருக்கும் போராளிகளுக்குமிடை

[5-ம் பக்கம் பார்க்க]

### மொறிஷியஸ் அமைச்சர் போராளிகளை சந்தித்தார்

(சென்னை)

தற்போது தமிழகம் வந்துள்ள மொறிஷியஸ் நாட்டின் கல்வி அமைச்சர் திரு. ஆறுமுகம் பரசுராமன் தமிழகத்திலுள்ள தமிழீழ விடுதலை இயக்கங்களின் தலைவர்களை சந்தித்து உரையாடினர்.

வசாவிளான் பாடசாலை

### மாணவிகள் நிலைமை தொடர்ந்து மர்மம்

(யாழ்ப்பாணம்)

வசாவிளான் மத்திய மகா வித்தியாலய விடுதி மாணவிகள் பற்றிய மர்மம் நீடிக்கிறது

கல்லூரி அதிபர் மாணவிகள் மற்றும் ஊழியர் பற்றிய விபரங்களடங்கிய மகஜர் ஒன்றை கல்விப்பணிப்பாளர் மூலம் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளர்.

பதற்றம் ஏற்படும் சமயத்தில் கல்லூரி விடுதி மாணவிகள் சென்று தங்குவதற்கு கல்லூரிக்கு சமீபத்தில் ஒரு

[5ம் பக்கம் பார்க்க]

### படையினர் படகுகளில் வெளியேற்றம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியில் முகாமிட்டிருந்த ஆயுதப்படையினர் நேற்று முன் தினம் நள்ளிரவு அங்கிருந்து வெளியேறியுள்ளனர்

கல்லூரியைச் சுற்றி போராளிகள் முற்றுகையிட்டு ஆயுதப்படையினரை நேரக்கிசுட்டதைத் தொடர்ந்து, படகுகள் மூலம் ஆயுதப்படையினர் வெளியேறியதாகத் தெரியவருகிறது. [கி]

## முஸ்லிம் இளைஞர் உட்பட மூவர் சுட்டுக் கொலை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் மூவர் பலியானார்கள். இவர்களில் ஒருவர் முஸ்லிம். இருவர் மீனவர்கள். பொலிஸ் விடுதிக்கு அண்மையில் இக்கொலைகள் இடம்பெற்றன

பலியான முஸ்லிம் இளைஞரான ரசூல்டீன [28 வயது] திருகோணமலையைச் சேர்ந்தவர். திருமணமானவர். நோன்பு காலததில் பாய சம் தயாரித்து விற்பனை செய்வது இவரது தொழில் மண்கும்பான் பள்ளிவாசலுக்கு அதிகாலை செல்கையில் இவர் சுடப்பட்டார். மற்றும் இருவர் ஆனைக்கோட்டை சாவக்காட்டைச் சேர்ந்த மீன்விற்பவர்களாவர்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து சத்திரச்சந்தி, கொட்டடி வீதி, பண்ணை வீதிகளில் பொதுமக்கள் நடமாட்டம் தடை செய்யப்பட்டுள்ளது மிட்டாஸ் கடைச் சந்தியிலிருந்து சத்திரச்சந்தி வரை, கே. கே எஸ். வீதி போக்குவரத்திற்குத் தடைசெய்யப் பட்டுள்ளது.

### அரச அதிகாரிகள் மாநாடு நேற்று நடக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் கோட்டை இராணுவ முகாமில் நேற்றுக்காலை நடைபெறவிருந்த மகாநாட்டிற்குச் சென்ற அதிகாரிகள் குழு இருமணிநேரம் அங்கு காத்திருந்தபின்னர் திரும்ப நேர்ந்தது

யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் வட மாநிலக் கல்வி அதிகாரி திரு. சுந்தரலிங்கம், வசாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு கணேசலிங்கம் மற்றும், இலாகாத் தலைமை அதிகாரிகள் சுமார் 12 பேர் நேற்றுக்காலை 10-15 மணிக்கு முன்னேற்பாட்டின்படி கோட்டைக்குச் சென்றனர்.

மாநாடு ஆரப்பிக்காததினால் அவர்கள் நண்பகல் 12 மணிக்குத் திரும்பவும் கச்சேரிக்குச் சென்றனர்

நாவற்குழி முகாமிற்கு வரும்படியும் மகாநாடு அங்கு நடைபெறுவதாகவும கிடைத்த தகவலைத் தொடர்ந்து நேற்றுப்பிற்பகல் அதிகாரிகள் குழு நாவற்குழி

[5ம் பக்கம் பார்க்க]

### வயோதிப மாது உட்பட நால்வர் பலி

[வேலணை]

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மண்டைதீவு-அல்லைப்பிட்டி பகுதியில் ஆயுதப்படையினர் ஹெலிகொப்டரிலிருந்து நடத்திய துப்பாக்கிச் சூட்டிற்கு ஒரு வயோதிப மாது உட்பட நால்வர் பலியானார்கள்.

மண்டைதீவு - பண்ணைச் சந்தியில் பல ஆண்டுகளாக தேநீர்க்கடை வைத்திருக்கும் திருமதி வேலாயுதர் பாக்கியம் (வயது 62, அவரது வளர்ப்பு மகனை செந்தில் ஆகியோரும், மண்டைதீவு-யாழ் வீதியில் ஊர்காவற்றுறை-பண்ணை

[5ம் பக்கம் பார்க்க]

ஊர்காவற்றுறை குண்டு வீச்சு:

### பலர் காயம்; வீடுகள்சேதம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறையில் கடந்த நான்கு தினங்களாக ஆயுதப்படையினருக்கும் போராளிகளுக்கும் பலத்த போர் நடைபெற்று வருகிறது

படகுகளில் வந்த சுமார் ஆயிரம் ஆயுதப்படையினர், மெலிஞ்சிமுனை, பருத்திஅடைப்பு, கரம்பன் பகுதிகளுக்கு சென்றபோது, போராளிகள் அவர்களை முன்னேறவிடாமல் தாக்குதல் நடத்தியதால் திரும்பிச் சென்றார்கள்

நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை, பருத்திஅடைப்பு, சுருவில், வேலணை, ஒலுவில், புளியங்கூடல் ஆகிய பகுதிகளில் இரண்டு பொம்பர்களும், இரண்டு ஹெலிகொப்டர்களும நடாத்திய தாக்குதலில பலவீடுகள் சேத

(5-ம் பக்கம் பார்க்க)

### சாவகச்சேரியிலும் போர் விமானங்கள்

[கிளிநொச்சி]

சாவகச்சேரி நகரபபகுதியில் போர் விமானங்கள் நேற்று முன்தினம் தாளப்பறந்து வட்டமிட்டன. நேற்றைய தினம் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் சாவகச்சேரி நகரில் மிகவும்தாழப்பறந்து வட்டமிட்டதைத் தொடர்ந்து பீதியடைந்த மக்கள் பாதுகாப்பு புகலிடங்களில் தஞ்சமடைந்தனர்.

இந்த நிலைமைகள் இங்கு சிலதினங்களாகத தொடர்ந்து இருந்து வருகிறது. இதைத் தொடர்ந்து சாவகச்சேரியில் சனநடமாட்டமின்றி நகரம் வெறிச்சோடிக் காணப்படுகிறது.

ஷெல், துப்பாக்கிச் சூடு:

### ஊர்காவற்றுறையில் 7 பேர் காயம்

[யாழ்ப்பாணம்]

ஊர்காவற்றுறையில் நேற்று முன்தினம் ஷெல் தாக்குதலிலும், துப்பாக்கிச் சூட்டிலும் இரு பெண்கள் உட்பட 7பேர் காயமடைந்துள்ளனர்.

இவர்களில 5 பேர் நேற்றுக் காலை, வள்ளங்கள் மூலம் நாவாந்துறைக்குக் கொண்டு

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு


உயர்விளைச்சலைபெற்று செய்கையாளரால் விரும்பி வாங்கும் பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெண்காய விதை விற்பனைக்குண்டு. குறுகிய கையிருப்பு. ஒரு கிலோ 250-00. பிள்ளையார் மெர்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் [C 2379]

சகாய விற்பனை 22, 23-5-86-ல் உரும்பராய் இந்துக் கல்லூரி பவளவிழா அரங்கில் மில்க்வைற் காட்சிச் சாலையில் மில்க்வைற் தயாரிப்புக்களை ரூ. 15/- வாங்கும் அன்பர்களுக்கு அழகிய பொலித்தீன் பாக்சம், வீட்டுத் தோட்டத்திற்குரிய கீரை விதைகளும், அறிவு நூல்களும் இலவசமாக வழங்கப்படும். மேலுறைகளைச் சேகரித்து வைத்திருப்போர் அங்கு கொடுத்து பெறுமதிவாய்ந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம். -மில்க்வைற், யாழ்ப்பாணம். (A 677)

### தேவை

Typist cum Clerk ஆங்கில தட்டெழுத்தில் நல்ல அனுபவம் உள்ளவர்கள் தேவை. திறமைக்குத் தகுந்த ஊதியம் வழங்கப்படும். A/L Bio படித்தவர்கள் மட்டும் தமது சொந்தக் கையெழுத்தில் 27-5-1986 க்கு முன் விண்ணப்பிக்கவும். ''Teens Copy'' 514/14, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். C 2422

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன்
உதயதாசன் குமரன்

உதயதாசன் சுகந்தி தம்பதிகளின் ஏகபுதல்வன் செல்வன் குமரன் தனது இரண்டாவது பிறந்தநாளை பிரான்சிலுள்ள தனது இல்லத்தில் இன்று 21-05-1986ல் வெகுசிறப்பாகக் கொண்டாடுகிரு. அவரை அம்மப்பா, அம்மம்மா- சுரேன்மாமா (பிரான்ஸ்), ஜேன் பாட்டா (பிரான்ஸ்), மீராச்சித்தி மற்றும் மாமன்மார் ருஜீவன்-நவரேஜ் குகன் ஆகியோர் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிருர்கள். (C 2429)

## வல்வையில் மோதல்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை ராணுவ முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் அதிகாலை 5-30 மணியளவில் புறப்பட்ட ராணுவத்தினரை நோக்கிப் போராளிகள் மேற்கொண்ட எதிர்த் தாக்குதலினல் ராணுவத்தினர் பின்வாங்கித் தமது முகாமிற்குச் சென்றனர்.

இத்தாக்குதலில் பல ராணுவத்தினர் பலியானதாகவும், சிலர் காயமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது. போராளிகள் தரப்பில் ஒருவர் காயமடைந்தார்.

இதனையடுத்து வல்வை ராணுவமுகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட மோட்டர், ஷெல், ஹெலிகொப்டர் தாக்குதல்களினல் ஆதிகோவிலடியைச் சேர்ந்த மணியம் (வயது50), மாறன் (வயது 12), விஜயரத்தினம் (வயது 30 ஊறணியைச் சேர்ந்தவர்) மற்றும் 40 வயதுடைய ஒரு பெண், ஒருமீனவர் ஆகியோர் காயமடைந்தனர். இதேவேளை கடலிலிருந்து கடற்படைப்படகினல்மேற்கொள்ளப்பட்டபீரங்கித் தாக்குதலினல் சில வீடுகள் சேதமடைந்துள்ளன.

(5-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

### அறிவித்தல்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி வடக்கு கலாசாலைவீதியை சேர்ந்த அம்பலவாணர் இராசையா என்பவரின் மரணசாதனமில்லா சொத்து விடயத்தில்.

மரணமெய்தியவர்.

மரணசாதன இல. 3946
நியாயாதிக்கம்

இராசையா கைம்பெண் தங்கரத்தினம், கலாசாலை ரேட்டு, திருநெல்வேலி வடக்கு யாழ்ப்பாணம்.

மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்கு மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டுவைகாசி மாதம் 16ந் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றூர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

1986-03 05

16-05-86

காரணம் காட்டும் திகதி 20-06-86 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கு. குலசிங்கம்,
பதிவ ளர்.

ஆர். சிவசுப்பிரமணியம்,
சட்டத்தரணி.
(C 2431)

## இன்று

[யாழ்ப்பாணம்]

வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் இராணுவ முகாம் அமைக்கப்பட்ட

(5ம் பக்கம் பார்க்க)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி கண்மணி
சினிவாசகம்

எங்கள் குடும்பத்தலைவியாக இருந்து இறையடி எய்திய திருமதி கண்மணி அவர்களின் மரணச்சடங்கில் கலந்துகொண்டோர்க்கும் அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும், பலவழிகளில் உதவிபுரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியுரித்தாகுக. 22-5-86 வியாழக்கிழமை, இலக்கம் 54/4, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள இல்லத்தில் நடைபெறும் அன்ரைது சபிண்டீகரண கிரியை, ஆன்ம ஈடேற்றப் பிரார்த்தனை வைபவங்களில்கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேம்.

-குடும்பத்தினர்.
(C 683)

## ஈராண்டு நினைவஞ்சலி



இராசலிங்கம்
துரைசிங்கம்

மண்ணுலகம்:
18-01-1930

விண்ணுலகம்:
21-05-1984

எல்லோரோடும் இனிமையாய்ப்பழகி நல்லோன் என்றுமை நாடே போற்ற வல்லோனுக வாழ்ந்தெமக்கென்றும் சொல்லொணுத் துணையாய் விளங்கிய வண்ணமே அல்லும் பகலும் அகத்தினில் இருத்தி நல்லாய் உம்மை நாம் மறவோமே.

எங்கள் உயிரிலும் உடலிலும் கலந்துவாழும் எங்கள் தெய்வமே! உங்கள் ஆத்மசாந்திக்குப்பிரார்த்திக்கின்றேம்,

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை.
''சிருத்'',
இருபாலை வீதி,
கோண்டாவில்.
(C 2423)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க் பயணமா?

பாஸ்போட், 6 படங்கள் ஆகியவற்றுடன் உடனே தொடர்பு கொள்ளவும்.

முகவரி:

T. துரைசிங்கம்

ஞானப்பிரகாசர் வீதி,
மல்வம், உடுவில்.

பாஸ்போட், விசா, ரிக்கற், பொண்ட் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும். C 2430

## பிரயாண ஒழுங்குகள்

ஈராக் நாட்டுக்கு கிளீனர்ஸ் (CLEANERS) ஆகச் செல்வதற்கு வேண்டிய ஆலோசனைகள் வழங்கப்படும். ஆண் பெண் இருபாலார்களுக்கும் தொழில் பெறுவதற்கு வேண்டிய ஆலோசனைகள் பெறுவதற்கும் 3 புகைப்படங்கள் கடவுச் சீட்டுடன் உடனடியாக தொடர்புகொள்ளவும்.

T. ஜெயக்குமாரன் (பாலு)

கிலுவானை ஒழுங்கை,
(கோப்பாய் கிறிஸ்த்தவக் கல்லூரி அருகாமையில்)
கோப்பாய் தெற்கு, கோப்பாய். C 2424

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ✶ ஜேர்மனி ✶ பிரான்ஸ்
★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்

**பாஸ்போட், பொன்ட் (BOND),
விசா, ரிக்கற்**

ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.
தொடர்பு கொள்ளவும்:

**INTERSUN GROUP,**

சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய்.

குறிப்பு: எமது முகவர் மே 25ந் திகதி டென்மார்க் அழைத்துச் செல்வார். ஜேர்மனி, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு முற்பணம், பாஸ்போர்ட் தந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

A 706

## யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபையின் 1986-ம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள சந்தைகளுக்கு (15-6-86ந் திகதி தொடக்கம் 31-12-86ம் திகதி வரை) சந்தைக் கடைகளுக்கும் (தொடர்ச்சியாக வாடகைக்கு வழங்குவதற்கு) சீல் வைத்த கேள்விகள் 30-5-86ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னல் ஏற்றுக் கொள்ளப்படும். தேவையான விபரங்களையும், கேள்விப் பத்திரங்களையும் அந்தந்த உப அலுவலகங்களில் 28-05-86ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்பத்திரத்தின் மூலப்பிரதி யாழ். அபி. சபை செயலாளருக்கும் இணைப்பிரதி சம்பந்தப்பட்ட உபஅலுவலகத்திற்கும் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். ([illegible])

## தேவை

**வீடு வாடகைக்கு:-**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் 3 அறைகளுடனும், நவீன வசதிகளுடனும் உள்ள வீடு வாடகைக்குத் தேவை.

**வொக்ஸ்வாகன் கார்:-**

நல்ல நிலையிலுள்ள வொக்ஸ்வாகன் கார் விலைக்கு வாங்குவதற்குத் தேவை.

நேரில் தொடர்புகொள்க:-

முகாமையாளர்,
**வீரகேசரி,** ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்.
(C 2433)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணி வாக்கு

கல்வி அறிவு அற்றவன் செய்த பாவத்துக்கு
இறைவன் அளிக்கும் தண்டனை சொற்பம்தான்.
ஆனல் கற்றறிந்தவன் இழைக்கும் பாவத்துக்கு
ஆண்டவன் கடுமையான தண்டனை அளிப்பான்.
—சாஅதி.

## நமது நோக்கு

# இனி என்ன செய்யும் இந்திய அரசு?

இராணுவத்தீர்வா? அமைதித்தீர்வா?

''இரண்டும்தான்'' என்பது இலங்கை அரசின் கொள்கை. இதைத்தான் இதுவரை நடைமுறையில் பார்த்தோம்.

ஆனல் இந்திய பிரதம மந்திரி திரு ராஜீவ் காந்தி நேற்றுமுன்தினம் வெளியிட்ட கருத்தின்படி பார்த்தால் 'இராணுவத்தீர்வு தான்' ஒரே வழி என்ற நிலைக்கு இலங்கை அரசு வந்துவிட்டமை ஊர்ஜிதமாகின்றது

அண்மையில் இலங்கைக்கு வருகைதந்த இந்திய இணையமைச்சர் ஒருவரின் தலைமையிலான குழுவினர் நடத்திய பேச்சு வார்த்தைகளின் போது இலங்கை அரசு தெரிவித்த யோசனைகள் சற்று முன்னேற்றகரமாக இருந்ததாக திரு. ராஜீவ் காந்தி கூறியிருந்தார்.

ஆனல் அவர் நான்கு முன்னணி ஆபிரிக்க நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளவிருந்த இறுதி நேரத்தில் இலங்கை உயர்ஸ்தானிகர் மூலம் தெரிவிக்கப்பட்ட கருத்து இலங்கை தனது நிலையை மாற்றிக் கொண்டுவருவதைக் காட்டுவதாக இருந்தது என ஆபிரிக்காவிலிருந்துதிரும்பி வந்தபின் பத்திரிகையாளர்களிடம் அவர் தெரிவித்துள்ளார்.

இப்போதும்கூட அமைதி முறையில் தீர்வொன்றைக் காண்பது சாத்தியம் என்பதே திரு. ராஜீவ் காந்தியின் நிலைப்பாடு

இந்தியக்குழு இலங்கைக்கு விஜயம் செய்த தறுவாயில் கொழும்பில் இடம்பெற்ற இரு குண்டு வெடிப்புக்கள், வடக்குகிழக்கில் ஏற்பட்ட இயக்க மோதல்கள், அதையொட்டி மக்கள் தொடர்பு சாதனங்களில் வெளியான செய்திகள், விமர்சனங்கள் யாவற்றையும் ஒருசேர ஆராய்ந்தள்ள இலங்கை அரசு தீவிரவாத இயக்கங்கள் பேச்சுவார்த்தைகளுக்கு உடன்படாத அளவில் இந்தியத் தரப்பினர் கோரும் விளக்கங்களைக் கொடுத்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லையென்று அறிவித்துவிட்டதாக செய்திகள் கூறுகின்றன.

இதை வைத்துத் தான் இலங்கை அரசு ராணுவத் தீர்வினை நோக்கியே சென்று கொண்டிருப்பதாகத் தெரிகின்றது என திரு ராஜீவ் காந்தி கூறியுள்ளார்.

இதை மெய்ப்பிப்பது போல் கடந்த சில தினங்களாகவே வட பகுதியில் ராணுவ நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன. முகாம்களிலிருந்து ராணுவத்தினர் வெளிவந்து பலவிடங்களிலும் இயக்கப் போராளிகளுடன் மோதியிருக்கிறார்கள். ஆங்காங்கே தற்காலிக முகாம்களையும் அமைத்துள்ளார்கள்.

ஹெலிகொப்டர்களும் விமானங்களும் பல இடங்களில்குண்டுகளைவீசித் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

யாழ்ப்பாணநகரில்நேற்று முன்தினம் மாலையிலும் நேற்றுக்காலையிலும் குண்டு வீச்சு விமானத் தாக்குதல் நடந்துள்ளது பலவிடங்களில் வர்த்தக ஸ்தாபனங்களும் வீடுகளும் சேதமுற்றுள்ளன.

இதே போன்று பிராந்தியத்தின் வேறுபல இடங்களிலும் தாக்குதல்கள் நடந்துள்ளன. தொடர்ந்து நடக்கும் அறிகுறியும் தென்படுகின்றது

இந்நிலையில் இந்திய அரசு என்ன செய்யப் போகிறது என்பதே கேள்வி.

அமைதித்தீர்வு காணும்படி உபதேசம் செய்துகொண்டிருப்பதில் அர்த்தமில்லை அதனை ஆணித்தரமாக, இலங்கை அரசின் காதில் உறைக்கும்படியாகச் செய்வதற்கு ஒரு மார்க்கமும் இல்லையா?

அண்டைநாடான இலங்கையில் அமைதித்திருப்பதில் உண்மையிலேயே அக்கறையுள்ள இந்தியத்தலைவர் அப்பாவி மக்கள் அன்றாடம் அநியயமாக அழிந்து கொண்டிருப்பதை விரும்பவில்லையென்றால் இன்னும் சற்றுத் தீவிரமாகவே இப்பிரச்னையில் அக்கறை காட்டமுடியும். இலங்கைத் தலைவர்களுடனும் சம்பந்தப்பட்ட சமூகத் தலைவர்களுடனும் நேரடியாகவே கலந்துபேசி இந்தப் படுகொலைகளுக்கு ஒருமுடிவு கட்டலாம.

# "ஒன்றுபட்டு உறுதிகுலையாது போரிடுவோம்" ஈ.பி.ஆர்.எல்.எவ்.

[யாழ்ப்பாணம்]

''தாயகத்தின் பகைவர்களுக்கு எதிராக சகபோராளிகளுடன் ஒன்றுபட்டு நின்று உறுதிகுலையாமல் போரிடுவோம். எமது தோழர்களை நாம் இழக்கும்போது எதிரிக்கெதிரான கோபமும், வெறுப்பும் அதிகரிக்கவே செய்யும். நாம் இழக்கும் தோழர்களுக்கும், சிந்திய குருதிக்கும் எதிரி பதில் சொல்லியே தீரவேண்டும்''.

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப்படை ஸ்டீபன் (செல்வரத்தினம்), கெங்கா (சிறி) ஆகிய இருவருக்கும் அஞ்சலி செலுத்தி வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளது

''இனியதேசத்தின் வீரப் புதல்வர்களே'' எறை தலைப்பில் உள்ள இப் பிரசுரத்தில் மேலும காணப்டுவதாவது:

''யாழ் கோட்டையிலிருந்து சிறிலங்கா அரசப்படைகள் வெளியேறவிடாது தடுக்கும் நோக்குடன் போரிட்டுக்கொண்டிருந்த மக்கள் விடுதலைப்படை உறுப்பினர்களான கெங்கா, ஸ்டீபன்

# மூன்று அயல்நாடுகள் மீது தென்னபிரிக்கா குண்டு வீச்சு

லுசாக்கா, மே 20

**ஸாம்பியா, பொட்ஸ்வானு ஸிம்பாப்வே ஆகிய மூன்று நாடுகள் மீது தென்னபிரிக்கா நேற்றுக் காலை விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியது. இத்தாக்குதல்களின் போது இந்நாடுகளைச் சேர்ந்த பல கட்டிடங்களும், அகதி முகாம்களும் சேதமடைந்தன.**

தென்னபிரிக்கக் கறுப்பினத்தவரின் விடுதலை இயக்கமான ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் (ஏ. என். ஸி ) காரியாலயங்கள் அமைந்துள்ள இடங்களிலேயே இந்த நாடுகளில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஸாம்பியாவின் தலைநகரான லுசாக்காவிலுள்ள ஒரு அகதி முகாம்மீதும் தென்னபிரிக்க விமானங்கள் குண்டு வீசின.

இதில் இருவர் கொல்லப்பட்டதாகவும், பத்துப்பேர் காயமடைந்ததாகவும் ஸாம்பிய அதிபர் திரு கென்னத் கௌண்டா குற்றஞ்சாட்டினர்.

இதேவேளை ஸிம்பாப்வேமீது நடத்தப்பட்ட தாக்குதலை இந்நாட்டின் பிரதமர் திரு. றெபேர்ட் முகாபே வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இத்தகைய தாக்குதல்களை நடத்துவதன்மூலம் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மீதான ஆதரவை நீக்கிவிட முடியாதுஎன்று அவர் குறிப்பிட்டார்.

தென்னபிரிக்கா அதன் அயல் நாடுகள்மீது இராணுவ ரீதியிலான தாக்குதல்களை மேற்கொண்டது இதுவே முதற் தடவையாகும் என்று தெரிவிக்கப்பட்டது

இத்தாக்குதல்களை அமெரிக்கா, இந்தியா உட்பட ஐ நா. ஸ்தாபனமும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

[கி]

ராஜீவ் கொலை முயற்சி:

# 4 சீக்கியர்கள் மீது லண்டனில் வழக்கு!

லண்டன், மே-20

பிரிட்டனில் நான்கு சீக்கியத் தீவிரவாதிகள்மீது பிரதமர் ராஜீவ் காந்தியைக் கொலை செய்ய முயன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

கடந்த வருடம் அகடோபரில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி பிரிட்டனுக்கு விஜயமொன்றை மேற்கொண்ட போதே இக்கொலைச் சதிமுயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குற்றஞ் சாட்டப்பட்ட நால்வரில் மூன்றுபேர் இக்கொலைச் சதிமுயற்சித் திட்டத்துக்குப் பண வசதியும், ஆயுத வசதியும் வழங்க முன்வந்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கொலைஞருக்கு இச்சதிமுயற்சியை நிறைவேற்றும் பட்சத்தில் 60 ஆயிரம் ஸ்டேர்லிங் பவுண்கள் பணம் வழங்க ஏற்பாடாகியிருந்ததாகவும் கூறப்பட்டது கூடவே கொலையை நிறைவேற்ற ரிவோல்வர் துப்பாக்கியொன்றும் வெடிமருந்துகளும் வழங்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது

பிரிட்டிஷ் பொலிசார் ஐ ஆர் ஏ. துப்பாக்கியாளர்கள் போன்று மாறுவேடம் தரித்துச் சென்றே இந்தச் சீக்கியக் கொலைகாரக் கும்பலைக் கைதுசெய்திருந்தனர் என்று நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

# இயன்பொத்தம் அணியிலிருந்து விலக்கப்பட்டார்

லண்டன், மே 19,

பிரிட்டனின் சகலதுறை கிரிக்கெட் ஆட்டக்காரரான இயன்பொத்தம், இந்தியாவுடனை கிரிக்கெட் பந்தயங்களில் விளையாடுவதிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளார்

போதைவஸ்துக்களை விநியோகஞ் செய்தது தொடர்பாகவே பிரிட்டன் அணியிலிருந்து பொத்தம் விலக்கப்பட்டுள்ளார்.

இயன்பொத்தம் முன்னரும் பல தடவை போதைவஸ்து பாவனை விநியோகம் தொடர்பாக இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுசபையினுல் தண்டிக்கட்பட்டிருத்தார் என்பது குறிப்பிடத்த கது. [கி]

# "தமிழ்மக்களின் அவலக்குரலை தர்க்கரீதியில் பாராளுமன்றில் எடுத்துக் கூறியவர்"

## 'சரத்' மறைவுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

''இந்த நாட்டில்வாழுகின்ற தமிழ் மக்களின் அவலக குரலை நாடாளு மன்றத்தில் தமிழ் பிரதிநிதிகளிலும் தமிழ் அமைச்சர்களிலும் பார்க்க கூடிய உத்வேகத்தோடு தர்க்க அடிப்படையிலும், உணர்ச்சி வளம் நிரம்பவும் எடுத்துக்கூறியவர், தமிழ் மக்களுக்கென ஒரு வரையறுக்கப்பட்ட பிரதேசமுண்டு, தமிழ் மொழி சிங்கள மொழி பெறும் இடத்தினைப் பெறுதல் வேண்டும், தரப்படுத்தல் என்னும் அம்சம் கல்வி நீதிக்கு முரணானது எனும் கருத்துக்களை நடாளு மன்றத்தில் முன் வைத்தவர், மலையகத் தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும், கல்வித் தரம் உயர வேண்டும் என மலையகத்தவர்களிலும் மேலாக எடுத்து உரைத்தவ இவர்'' என திரு சரத்முத்தேட்டுகம மறைவு குறித்து யாழ் பல்கலைக்கழக கல்வித் துறை தலைவர் பேராசிரியர் ப. சந்திரசேகரம் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

1981ம் ஆண்டில்சல்வி வெள்ளை அறிக்கை அரசினுல் வெளியிடப்பட்ட போது இது வர்க்க அடிப்படையில் எழுந்த தனியார் துறைக் கல்வியைப் பேணிக் காக்கும் ஆங்கில மொழிக்கு விசேட இடம் அளிக்கும் கல்விச் சீர்திருத்தம் என நாட்டின் பல பாகங்களில் பிரசாரம் செய்தவர் இவர் எனக் குறிப்பிட்ட பேராசிரியர் சந்திரசேகரம் 'பல விடயங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஒ றித்து நின்ற வேளைகளில் தனியாக நின்று தனது கருத்துக்களை எடுத்துக் கூறிய குரல் ஓய்ந்து விட்டது, 'மனிதன் இறப்பான். மனித குலம் இறவாது' என்பது மார்க்சிய தத்துவம், அவ் வண்ணம் நண்பா சரத் கடைப்பிடித்த தத்துவம் என்றென்றும் நிலைத்து நிற்கும்'' என தெரிவித்துள்ளார்.

ஆகியவர் தம் தாயக விடுதலைக்காக உயிரை இழந்தனர் தியாகத்துக்கும், தேசப்பற்றுக்கும் [illegible] தாகஈழம்தலைவணங்குகிறது.''

(ஐ)

# மீண்டும் தலைவரானுர்

[பச்சிலைப்பள்ளி]

பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நெறியாளர் குழு போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு எம். எஸ். தர்மலிங்கம் முன்னிலையில் நடைபெற்ற விசேட பொதுக் கூட்டத்தில் புதிய நெறியாளர்கள் பின்வருவோர் தெரிவு செய்யப்படடுள்ளார்கள்.

திருவாளர்கள் அ. வ. ஜோர்ஜ், வி. எஸ். தியாகராசா, வ நாகலிங்கம், சி. பசுபதிப்பிள்ளை. அ. அல்பிரட், க. இரத்தினராசா, ம. ஜோசப், திரு. அ வ. சங்கத்தின் தலைராக ஜோர்ஜ் மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் உப தலைவராக திரு வி எஸ். தியாகராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## சந்ததம் பணிவேன் வந்தருள் ஹரனே!

ராகம்;- ஹம்சநாதம் தாளம்:- ஆதி

பல்லவி

சுந்தரர் போற்றிய சுந்தரேஸ் வரனே!
சந்ததம் பணிவேன் வந்தருள் ஹரனே!
[சுந்த... ]

அனுபல்லவி

ஆதியும் அந்தமும் அற்றதோர் முதலே!
ஓதியும் தேடியும் கண்டிடாப் பொருளே!
[சுந்த... ]

சரணம்

நெஞ்சினைத் தந்தவர் நெஞ்சினில் உறைவாய்!
தஞ்சமென றடைந்தவர்க் கஞ்சலென் றருள்வாய்!!
மஞ்செனும் அலைதவழ் நெடுங்கடற் கரைதனில்
வஞ்சியோ டுறைகின்ற கௌரி மணாளனே!
[சுந்த... ]

— முருகு

[இன்று திருக்கேதீச்சரம் 8-ம் திருவிழா]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "போஷாக்கு பற்றிய அறிவு மக்களுக்கு அவசியம்"

[யாழ்ப்பாணம்]

"பெற்றோர் ஆசிரியர் தொடர்பிலேயே பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி தங்கியுள்ளது. உங்கள் பிள்ளைகளின் குறைபாடு தனித்தன்மை விஷேச ஆற்றல் முதலியவற்றை ஆசிரியர்களுடன் கலந்துரையாடினால் பிள்ளைகளின் கல்விநிலைக்குத் தக்கவாறு கவனமெடுத்து கற்பிப்பதற்கு ஆசிரியர்களுக்கு உதவியாக இருக்கும் மேலும் பிள்ளைகள் அன்றுடம் செய்யும் பாடசாலை வேலைகளை மதிப்பிட்டு உற்சாகமூட்டுவதே பெற்றோர் ஆசிரியர்களுக்குச் செய்யும் தலையாய உதவியாகும் இவ்வித்தியாலயப் பெற்றோர் செய்த அதிஷ்டம் சேவைமனப்பான்மையுள்ள நல்ல ஆசிரியர்களையும் அதிபரையும் பெற்றதாகும்".

இவ்வாறு வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் நடைபெற்ற மாணவர்களின் பெற்றோருக்கான கருத்தரங்கிலும், அபிவிருத்திச்சபையினரால் அன்பளிப்பாகச்செய்து வழங்கிய வகுப்பறைத் தளபாடங்களை கல்வி இலாகாவின் சார்பில் பொறுப்பேற்கும் வைபவத்திலும் சிறப்புரையாற்றிய நல்லூர் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. சு சிவநாயகமூர்த்திகூறினார்.

'ஆரம்பக் கல்வியே அத்திவாரமாகும்' என்னும் விடயமாக ஆசிரியை செல்வி இ. யோகராணி, ஆசிரியர் திரு எஸ் செல்வராசா ஆகியோர் பெற்றோருடன் கலந்துரையாடினர்கள்.

"பெற்றோர் ஆசிரியர்களையும், ஆசிரியர்கள் பெற்றோரையும் குறை கூறுவதால் பயனில்லை. இரு சாரருக்கும் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் ஒற்றுமையையும் இவ்விதமான கருத்துப்பரிமாறலால்தான் ஏற்படும்" என்று வித்தியாலய அதிபர் கா. கணேசதாசன் நன்றியுரையில் கூறினர்.

இவ்வைபவத்தில் கலந்துகொண்ட 'மில்க்வைற்' அதிபர் திரு. க. கனகராசா மாணவர்கள் இலகுவாக தண்ணீர் சேகரித்துக் குடிப்பதற்கு 'பைப்' பூட்டிய பெர்யவாளிகளை அன்பளிப்பாக வங்கினர்.

## இப்பொருள்கள் யாருடையவை?

யாழ்நகரிலிருந்து15 05 86ம் திகதி இரவு 7 மணிக்குப் புறப்பட்ட 785 ம் இலக்க சேவை மினி பஸ்ஸில் பிரயாணம் செய்த இருவரின் பார்சல்கள் கைமாறியுள்ளன. கைமாறிய பார்சலில் ஒன்றினை திரு.அ இந்திராசா 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். அலுவலக நேரத்தில் வந்துகைமாறியுள்ள பார்சலை ஒப்படைத்து உரிய பார்சலை பெற்றுக் கொள்ளவும்.

மானிப்பாய்- சுதுமலை அம்மன் கோவிலடியைச் சேர்ந்த திரு ம. வாசுதேவன் சுதுமலை அம்மன் கோவிலடியில் கண்டெடுத்த மூக்குக் கண்ணாடி ஒன்றினையும், யாழ் வைமன் வீதியைச் சேர்ந்த திரு.அ.விக்னேஸ்வரன் நல்லூர் பருத்தித்துறை வீதியில் கண்டெடுத்த ஒரு திறப்புக் கோர்வையையும் 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளனர். உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கடலில் பலி

(திருகோணமலை)

கடலில் குளித்துக்கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்தமூவர் பலியானர்கள். ஒருவர் ஆபத்தானநிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அண்மையில் கோணேஸ்வரர் ஆலயத்திற்கு முன்னால் உள்ள கடலில் குளிக்கும் போது இச்சம்பவம்நிகழ்ந்தது.

(மா)

## உருத்திரபுரம் மக்கள் பாராட்டுக்குரியர்

[கிளிநொச்சி]

"உருத்திரபுரம்பகுதி மக்களின் இனப்பற்றும் தளராத முயற்சியும் மிகவும் போற்றுதற்குரியது. இப் குதி மக்களின் சமயப்பணியும் சமூகப் பணியும் காலத்தால் அளிக்க முடியாததாகும்"

இவ்வாறு உருத்திரபுரம் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய சமூக சேவையாளரும் அகில இலங்கை காந்திசேவா சங்க செயலாளருமாகிய ஆறுமுகம் செல்லத்துரை கூறினர்

இவ் வைபவத்தில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் ஆளணி அலுவலர் எஸ் தங்கராசா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். விசேட சேவை அதிகாரி பீ. யோகேந்திரன் கிராம சேவையாளர் இ. தியாகலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டனர்.

புதிய நிர்வாகிகள் தெரிவின்போது ஆ. செல்லத்துரை மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். உப தலைவர்களாக நா. இரத்தினமும், இ நாகரத்தினமும் தெரிவானர்கள் செயலாளராக. அ. எமிலியானஸ்சும் உப செயலாளராக எஸ். ஜெகநாதனும் பொருளாளராக ஜே. தார்ஸ்சியஸ்சும் தெரிவு செய்யப்பட்டனர்.

## அரச ஊழியர் விடுதி

(வவனியா)

இரண்டரை இலட்சம் ரூபா செலவில் நெடுங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் ஊழியர்களுக்கான விடுதி ஒன்று கட்டப்பட்டு வருகின்றது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இந்த நி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வவனியா உதவி பணிப்பாளர் திரு ரீ. துரைசிங்கம் தெரிவித்தார்.

# இன்றைய பலன்

மாதம்- வைகாசி
திகதி- 7[1986-5-21]
கிழமை- புதன்
திதி- துவாதசி மு ப. 9.17ன் மேல் திரயோதசி
நட்சத்திரம்- சித்திரை மு. இ. வரை

மேடம்: வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும். எதிலும் தயக்க மனப்பான்மை உருவாகும். சிநேகித வழியால் கவலைகள் தோன்றும்.

இடபம்: எல்லாத்துறையிலும் அபிவிருத்தி காணப்படும். மாணவர்களாயின் முன்னேற வாய்ப்புண்டு நண்பர்களின் உதவியும் அவசியம் கிடைக்கும்.

மிதுனம்: நல்லவர்களின் அறிமுகம் இன்று கிடைக்கும் புதியமுயற்சிகள் கைகூடும். தொழில் திறமையில் முதலிடம் பெறுவீர்கள்.

கடகம்: எதிலும் முன்னெச்சரிசையுடன் நடந்துகொள்

[5ம் பக்கம் பார்க்க]

## எல்லே விளையாட்டில் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கான எல்லே விளையாட்டு இறுதிப் போட்டி நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் விளையாட்டு மைதானத்தில்நடைபெற்றது இப்போட்டியில் வலி மேற்கு சங்கானை அதிபர் பிரிவின் கீழ் இயங்கும் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகத்துக்கும் யாழ்ப்பாணம் உதவிஅரசாங்க அதிபர் பிரிவின் கீழ் இயங்கும் விளையாட்டுக்கழகத்திற்குமிடையில் நடைபெற்றது.

இப் போட்டியில் முதலில் ஆடிய யாழ் உதவி அ சாங்க அதிபர் பிரி அணி 8 ஒட்டங்களையும், சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவு [வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகம்] 15 ஒட்டங்களையும் இரண்டாம் ஆட்டத்தில் யாழ் உதவி அரசாங்க அதிபர்பிரிவு9 ஓட்டங்களையும்சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவு 3ஓட்டங்களுடன் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இந்த வெற்றியினால் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் இயங்கும் வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்டத்திற்கான சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

# "பெற்றோர் ஆசிரியர்தொடர்பு பிள்ளைகளின் கல்விக்கு அவசியம்"

[வவனியா]

"போஷாக்கு இன்மைக்கு வறுமையும் ஒரு காரணமாக இருந்த போதிலும் போஷாக்கு பற்றிய அறிவுமக்களுக்கு இல்லாத காரணத்தினாலேயே இக் குறை பாடு ஏற்படுவதாக ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது"

வவனியா புதுக்குளத்தில் நடைபெற்ற வளர்ந்தோர் சத்துணவுக் கல்வித் திட்டக் கருத்தரங்கில் பேசுகையில் வவனியா உதவித் திட்ட பணிப்பாளர் திரு ரீ. துரைசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் பேசுகையில்,

"கிராமிய மக்களிடையே போஷாக்கு பற்றிய விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்தும் நோக்குடன் இப்படியான திட்டங்கள் திட்ட அமுலாக்கல் அமைச்சினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன" என்றார்.

வவனியா அரச அதிபர் திரு. கே. ஸி. லோகேஸ்வரன் பேசுகையில் "ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அம்மக்களின் போஷாக்கு தரம் உயர வேண்டும். மக்களிடையே போஷாக்கு பற்றி விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட வேண்டும் அடிப்படை போஷாக்கு கல்வி சுற்றாடல் சுகாதாரம் பற்றிய அறிவும் மக்களுக்கு வழங்க வேண்டியுள்ளது" என்றும் கூறினர்.

## வெற்றிக்கிண்ணம் கோவளம் இளைஞர் கையில்

(யாழ்ப்பாணம்)

மூளாய் சிறீகாந்தா விளையாட்டுக் கழகத்தினரால் அண்மையில்நடாத்தப்பட்ட 25ஓவர்களை கொண்டமென்பந்துகிரிக்கெட் சுற்றுப் போட்டியில் காரைநகர் கோவளம் இளைஞர் மன்றம் அளவெட்டி விளையாட்டுக் கழகத்தை வென்று வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கோவளம் இளைஞர் மன்ற அணி 25ஓவர்களில் 7 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 101 ஒட்டங்களைப் பெற்றுக் கொண்டது. த. சிவபாலன், த. சிவசோதி சு நடராசா ஆகியோர் மிகச் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி முறையே 33,32,20 ஒட்டங்களைப் பெற்று ரசிகர்களின் பாராட்டுதலைப் பெற்றனர்.

அளவெட்டி விளையாட்டுக் கழகம் நிதானமாகவே துடுப்பெடுத்தாட ஆரம்பித்த பொழுதிலும் 4 விக்கெட்டுக்கள் நஷ்டத்துக்கு 33 ஒட்டங்களைப் பெற்றநிலையில் நடுவரின் முடிவை எதிர்த்து வெளிநடப்புச்செய்தனர்.

யாழ் மாவட்டத்தின் பல முன்னணிக் கழகங்கள் கலந்துகொண்ட இச்சுற்றுப் போட்டியில் அரை இறுதி ஆட்டத்தில் கோவளம் இளைஞர் மன்றம் எதிர் சங்கானை எஸ். பி. கோ கழகத்துக்கிடையேயான போட்டி மிகவும் விறு விறுப்பாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

இச்சுற்றுப் போட்டியில் சிறந்த துடுப்பாட்டக்காரராக கோவளம் இளைஞர் மன்ற வீரர் எஸ். ஞானசோதியும், சிறந்த பந்துவீச்சாளராக சிறீகாந்தா கழக வீரர் எ.நீலவண்ணனும் சிறந்த சகல துறை ஆட்டக்காரராக இதே அணியைச் சேர்ந்த எஸ். ஆனந்தகுமாரும் தெரிவுசெய்யப்பட்டனர். (சிவ)

## தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

கொழும்பு கோட்டையில் தனியார் விடுதியொன்றில் தங்கியிருந்த தமிழ் இளைஞர் ஒருவர்ராணுவத்தினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். இந்த இளைஞர் நீண்டகாலமாக அந்தத் தனியார் விடுதியில்தங்கியிருந்தார்எனத் தெரிய வருகிறது.

## பனை அபிவிருத்தி பயிற்சி நிலையம்

[மாவிட்டபுரம்]

பனை அபிவிருத்திச் சபையின் கைப்பணிப்பயிற்சி நிலையமொன்று இணுவிலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இணுவில் கிராம அபிவிருத்திச் சங்கம் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியன இணைந்து நடத்தும் இப்பயிற்சி நிலையத்தில் 20 யுவதிகள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

யாழ் மாவட்ட மங்கையர் கழகம் இணுவில் மகளிர் பயிற்சி நிலையத்தில் மேற்படி பனம் பொருள் பயிற்சி நெறியை பனை அபிவிருத்திச் சபை பணிப்பாளர்களில் ஒருவரான திரு. எஸ். பாலசிங்கம் ஆரம்பித்து வைத்தார்.

ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்ட இணுவில் கிளை தலைவரும் கிராம அபிவிருத்திச் சங்க செயலாளருமான திரு, தி. சி. சண்முகலிங்கம் இவ்வாரம்ப வைபவத்திற்கு தலைமை தாங்கி பனை அபிவிருத்திச் சபையின் பயிற்சித் திட்டத்தை பாராட்டிப் பேசினர்.

## இந்திய வீராங்கனை பாதணி இன்றி முதலிடம்

டிரினிடாட்,மே 19

சர்வதேச மரதன் ஓட்டப்போட்டியொன்றில் இந்திய வீராங்கனை ஆஷாஅகர்வால் முதலிடம் பெற்றுள்ளார்.

பாதணிகள் எதுவுமின்றி கரீபியன்தீவான டிரினிடாட்டில் நடந்த இப்பந்தயத்தில் இவர் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

42.2 கிலோ மீட்டர் தூரத்தை 2 மணி 53 நிமிட நேரத்தில் ஆஷா அகர்வால் ஓடி முடித்து முதலாமிடத்தைப் பெற்றார். இப்போட்டியில் ஆயிரக்கணக்கானஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர். [கி]

## மணமக்கள் அதிர்ஷ்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ்.புனித மரியாள் பேராலயத்தில் நடைபெற்ற திருமணச் சடங்கின் போது ஹெலிகொப்டர் துப்பாக்கிச் சூட்டில் மணமக்கள் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

ஒட்டைப்பிரித்துக் கொண்டு வந்த சன்னமொன்று ஆலய மூலஸ்தானத்ருகே நின்றிருந்த மணமக்களுக்குச் சிறிது பின்னால் விழுந்தது. நேற்று பிற்பகல் நாலரை மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

## அவர்கள் கோட்டைக்குள் சென்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணைப் பாலத்தில் கடந்தஞாயிறு அதிகாலை முதல் நேற்றுமுன்தினம்காலை10 மணிவரை நின்றிருந்த யாழ். கோட்டை இராணுவத்தினரும், நான்கு இராணுவ வாகனங்களும் ஹெலிகொப்டர் வட்டமிட்டபடி சுட்டுக் கொண்டிருக்க யாழ். கோட்டையை வந்தடைந்தனர் நேற்று முன்தினம் காலை 11 மணியளவில் ஹெலிகொப்டர் யாழ் நகரத்தையும், பண்ணைக் கடற்கரையோரமாகவும் வட்டமிட்டபடி சுட்டுக் கொண்டிருக்க இராணுவத்தினரும் வாகனங்களும் கோட்டை முகாமுள் சென்றனர். [ஐ]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

மானிப்பாய் யாழ்ப்பாணம் வீதி நாகலிங்கம் தியாகராசா என்பவரின் மரணசாதன தத்துவ விடயத்தில்.

இறந்தவர்.

இல. ரி. 3964

சின்னத்தம்பி சிவலோக சுந்தரம், "நில்கந்தா", மானிப்பாய்.

மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன நியாயாதிக்க வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு ஆனி மாதம் 13ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1986-ம் ஆண்டு வைகாசி மாதம் 5-ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைதல்:
மா. தியாகராசா,
மனுதாரின் சட்டத்தரணி,
ஆனைக்கோட்டை.

(C 2420)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்வையில்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் பிற்பகல் இரு பொம்பர் விமானங்களில் இருந்து 12 குண்டுகள் பொழியப்பட்டதில் பொலிகண்டியில் இரு வீடுகள் தரைமட்டமானதுடன் சில ஆடுகளும் இறந்துள்ளன. உயிர்ச்சேதம் எவும் ஏற்படவில்லை.

இச்சம்பவங்களையடுத்து வல்வைப்பகுதி ஸ்தம்பிதமடைந்தது. போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறவில்லை.


## நன்றி நவிலல்

கடந்த வருடத்தில் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்ட 30ஸ்ரீ 5373 (Coastal Bus) வாகனத்தை மீட்டுத் தந்த 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கத்தினர்க்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பஸ் உரிமையாளர்.

(C 2440)



## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்

விஸ்வலிங்கம் விக்னராசா

தோற்றம்: 1935-03-06

மறைவு: 1986-04-21

எல்லோருக்கும் நல்லோராய் எம்மவர்க்கும் வல்லோராய் வாழ்ந்து மறைந்த எம் அன்புத் தெய்வமே! என்றும் நிலைக்கும் உன் நினைவு எம்மனதில்

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் 21-05-86 இன்று நடைபெறும். அதில் கலந்து அவரின் ஆன்மா ஈடேற பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, மக்கள், சகோதரர்கள்.

அச்சுக்கூட ஒழுங்கை, 'தலையாளி' கொக்குவில். (C 2439)



எம்பயர் திரையில்
விஜயகாந்த் சவுண்டர்
வைதேகி காத்திருந்தாள்

லிடோ Jaffna
10-30, 2-30, 4-30 6-30
VICTORY AT ENTEBBE
[Full of Airport Attack]
[உகண்ட விமானநிலைய நேரடித் தாக்குதல்]

வெலிங்டன்
10-30, 2-30, 6-15
மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர் நடித்த
விதி
(கலர். புதிய பிரதி)

லிபேட்டி சினிமாவில்
வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்
Allen Dod நடித்த
633 SQUADRON
பயங்கர விமானத்தாக்குதல் நிறைந்த யுத்தப்படம். வயது வந்தவர்களுக்கு மட்டும்.
10-00, 2-15, 4-15, 6-30
வயது வந்தவர்களுக்கு மட்டும்.


## சிவாசார்ய பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். சிவானந்த குருகுல சிவாச்சார்ய பரீட்சைகள் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச்செயலாளர் பிரம்மஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்கள் தெரிவிக்கிறார். இப்பரீட்சைகள் அடுத்தமாதம் நடைபெறவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## இன்று நடக்கும் விளையாட்டுப் போட்டிகள்

[யாழ்ப்பாணம்]

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலய மெய்வல்லுநர் போட்டிகள் இன்று புதன்கிழமை நடைபெறுகின்றன.

யாழ்ப்பாண மாநிலக்கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவவிநாயகமூர்த்தி, கல்வித் திணைக்கள வட்டாரக் கல்விஅதிகாரி திரு க. மகேசன், திருமதி தனலட்சுமி சிவவிநாயகமூர்த்தி ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வர். வித்தியாலய அதிபர் திரு. சி. மு. கந்தையா தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

## இன்று

[2ம் பக்கத் தொடர்ச்சி]

அன்று இவ் வித்தியாலய விடுதியில் தங்கி இருந்த பெண்கள் ஐவர் உட்பட 12 பேரின் நிலை பற்றியும் இவ் வித்தியாலய நிலை பற்றியும் ஆலோசனை செய்வதற்கான கூட்டமொன்று உரும்பராய் சைவத்தமிழ் மகா வித்தியாலயத்தில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என்று இவ் வித்தியாலய அதிபர் திரு. என். கணேசபிள்ளை தெரிவிக்கின்றார். (ஐ)

## இன்றைய பலன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ளவும். உங்கள் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு திரைமறைவில் சதிகள் நடைபெறும்.

சிங்கம்: குடும்பத்தில் மகிழ்ச்சிகரமானசம்பவங்கள் இடம் பெரியவர்களின் உதவி தாராளமாகக் கிடைக்கும். பொருள் வரவில் திருப்தியும் உண்டு.

கன்னி: ஆதரவு காட்டியவர்களே உங்களை அலட்சியப் படுத்துவதற்கு முனைவார்கள். நண்பர்களின் தொல்லைகளால் பணநெருக்கடியும் தோன்றும்

துலாம்; புதிய இடங்களிலிருந்து உங்களுக்கு ஆதரவு வளரும். எதிர்பார்த்தவர்களே உங்கள் நண்பர்களாவார்கள். பிறருக்கு உதவுவதில் மகிழ்ச்சியடைவீர்கள்.

விருச்சிகம்: தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும். மேலதிகாரிகளின் ஆதரவைத் தாராளமாகப் பெறுவீர்கள். குடும்பத்திலும் மகிழ்ச்சி தென்படும்.

தனுசு: சந்தர்ப்பத்துக்கு ஏற்றவண்ணம் பொருள் தாராளமாகக்கிடைக்கும். சிலர் வாழ்க்கையில் அதிர்ஷ்டலாபங்களுக்கும் இடம் உண்டு.

மகரம்: நெருக்கடியான சூழ்நிலை உருவாகும். சிலர் கடன்தொல்லையால் பாதிக்கப்படுவார்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ககவும்.

கும்பம்: நடையில் தயக்கம் ஏற்படும். உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகிவிடும். உடல்நலம் சிறிது பாதிக்கப்படும்.

மீனம்; தொழில் புரியுமிடத்தில் கருத்து வேற்றுமைகள் தோன்றக் கூடும். கொடுக்கல் வாக்கல் மூலம் எதிகளைத் தேடிக்கொள்வீர்கள்.

திருமதி
வே. ரவீந்திரன்

நாடற்றோர் சட்டவிதியை ஆராய

# அமைச்சர்களை உள்ளடக்கிய உயர்மட்டக் குழு

[கொழும்பு]

நாடற்றோர் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கான சட்ட விதிகளை அமுல்படுத்துவது பற்றி ஆராய்வதற்காக உயர் மட்டக் குழு ஒன்றை அரசாங்கம் நியமித்துள்ளது.

இந்த உயர்மட்டக் குழுவில் அமைச்சர்கள் எஸ். தொண்டமான், திரு லலித் அத்துலத் முதலி ஆகியோர் அங்கம் வகிக்கின்றார்கள்.

இக்குழுவின் அங்குரார்ப் பணக்கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றது. அப்பொழுது நாடற்றவர்கள் பற்றிய விபரங்களைப் பரிசீலனைசெய்ய உத்தியோகத்தர்களைத் தோட்டங்களுக்கு அனுப்புவதென்று முடிவுசெய்யப்பட்டது. [ரா]

## யாழ். ஆஸ்பத்திரி 4 வார்ட்டுகள் சேதம் ஒரு நோயாளி காயம்

[யாழ்ப்பாணம்]

''நேற்று முன்தினம் யாழ் நகரத்தில குண்டுவீச்சு விமானங்களும் ஹெலிகொப்டர்களும் நடத்திய தாக்குதலால் யாழ் ஆஸ்பத்திரியின் 14,15, 18,24ம் வார்ட்டுகள் சேதமடைந்துள்ளன. ஒரு நோயாளி காயமடைந்துள்ளார், பாவனையாளர்கள்சிலரும் காயமடைந்துள்ளனர். இது முன்பு எமக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு மாறுபாடானதாக உள்ளது. எனவே இதுபற்றி உடன் நடவடிக்கை எடுக்கவும்.''

இவ்வாறு யாழ் ஆஸ்பத்திரி ஊழியர் சங்கம் சுகாதார அமைச்சருக்கு அனுப்பியுள்ள மகஜரில்தெரிவித்துள்ளது. [ஐ]

## மட்டக்களப்பில் கைதான 75 பேர் பூஸாவுக்கு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு கல்லடிமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 75 பேர் நேற்று காலி பூஸா முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் பலத்த பாதுகாப்புடன் வகனங்களில் கொண்டு செல்லப்பட்டபோதிலும் ஒவ்வொரு பிரதான சந்தியிலும் வெவ்வேறு நிற வாகனங்களில் மாற்றி மாற்றி அமர்த்தப்பட்டனராம். [மா]

## வயோதிபர்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வதி நோக்கிவந்த திரு.வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம்(வயது 30), திரு. மாசிலாமணி கருணாகரன் (வயது 22) ஆகியோரே மரணமானவர்கள்.

மண்டைதீவுச் சந்தியிலுள்ள தேநீர்க்கடையும், மடமும் குண்டினால்தகர்க்கப்பட்டுள்து

இதேவேளை யாழ்ப்பாணத்தில் இருந்து தீவுப்பகுதி நோக்கிப் பறப்பட்ட சிறிய படகுகள் மீதும் நேற்றுக்காலை துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. தீவுப்பகுதியிலிருந்து யாழ். வந்த பல பயணிகள் சனிக்கிழமை முதல் யாழ். நகரிலேயே தங்கியுள்ளனர். [வண். நிரு.]

## அரச அதிகாரிகள்--

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நோக்கி சென்றபோது வழியில் சில இளைஞர்ால் தடுத்து நிறுத்தித்திருப்பி அனுப்பப்பட்டதாகத் தெரியவருகிறது. (க)

## 2 ஹெலிகள் கீழிறங்கும் முயற்சி தோல்வி

(யாழ்ப்பாணம்)

இரு ஹெலிக்கொப்டர்கள் நேற்றுக்காலை கோட்டை இராணுவ முகாமில் இறங்க முற்பட்டபோது கோட்டையைச் சுற்றி நிலை கொண்டுள்ள போராளிகள் சுட்டுக்கொண்டு இருந்ததால் அவை திரும்பிச் சென்றன. அரைமணி நேரமாக இரு ஹெலிகொப்டர்களும் கீழிறங்க முயற்சித்தன, ஆயினும் முடியவில்லை. [க]

## பலர் காயம்---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மடைந்தன. அம்பலப்புலத்தில் 3 வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன ஊர்காவற்றுறை மக்கள் வங்கியும் சேதமாகியுள்ளது.

பிற்பகல் நடந்த இத்தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளனர், என்றும் கால்நடைகள் சில இறந்தனவென்றும், தெரிகிறது

நேற்றுக்காலையும் ஆயிரக் கணக்கான ஆயுதப்படையினர் ஊர்காவற்றுறைக்கு வந்தபோது போராளிகள் எதிர்த்து தாக்குதல் நடத்தினார்கள். [ஐ]

## மக்கள் வெளியேற்றம்

[கிளிநொச்சி]

இயக்கச்சிச் சம்பவங்களைத் தொடர்ந்து இயக்கச்சிப்பகுதி பொதுமக்கள் இரவோடிரவாக இடம்பெயர்ந்து ஆளியவளை பனைப்பகுதியில் தஞ்சமடைந்துள்ளனர்.

## வசாவிளான்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் ஆனல் அந்த வீட்டிற்கு மாணவிகள் எவரும் வரவில்லை என்றும் கூறப்படுகிறது. இதுபற்றி மாணவிகளின் பெற்றோர் நேற்று அரசாங்க அதிபருக்கு புகார் செய்தனர்.

கோட்டையில் நேற்றுக் காலை நடைபெற விருந்த மாநாட்டில் இம்மாணவிகள் பற்றிய விடயமும் ஆராயப்பட விருந்தபோதிலும் நேற்று இம்மாநாடு நடைபெறவில்லை. [க]

## ஷெல், துப்பாக்கி.--

(1ம் பக்கம் பார்க்க)

வரப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

காயமடைந்தவர்களைக் கொண்டுவந்தபோது படகை நோக்கி ஹெலிக்கொப்டர் சுட்டதாகவும் தெரியவருகிறது.

காயமடைந்த எஸ் பேரின்பநாயகி - கரம்பன் (14 வயது) தி. செல்லத்துரை கரம்பன் (51 வயது), எம். மல்லிகாமலர் (45 வயது), ஞானசீலன், நாரந்தனை [17 வயது], எம், இரத்தினசிங்கம் நாரந்தனை ஆகியோர் யாழ் ஆஸ்பத்திரியல் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

போரின்பநாயகியின் கரம் ஒன்று அகற்றப்பட்டுள்ளது. மல்லிகா மலருக்கும் ஷெல் தாக்குதலினல் கையில் பலத்தகாயம் ஏற்பட்டுள்ளது. ஞானசீலனுக்கு வயிற்றின் கீழ்ப்பகுதியில் காயம்ஏற்பட்டுள்ளது. (க)

## இலங்கைத்தமிழர்-

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொலைகள்பற்றியவிபரங்களும் அச்செய்தியில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

## பழனியாண்டி கண்டனம்

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. பழனியாண்டிதிரு. ராஜீவ்காந்திக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் ''இலங்கையில் தமிழ்ச்சகோதரர்களைக்காப்பாற்ற இந்தியா உடனடி நடவடிக்கையில் ஈடுபடவேண்டும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது இடம்பெற்றுவரும் வன்முறைச்சம்பவங்களுக்குத் தமது பலத்த கண்டனத்தையும் தெரிவித்துள்ளார். (ரா)

## யாழ். நகரில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

யில் நடந்துவரும் யுத்தத்தின் எதிரொலியாக யாழ் நகரிலிருந்து பலகுடும்பங்கள வெளியேறிக்கொண்டு இருக்கின்றன. வர்த்தகர்கள் கடைகளிலுள்ள பொருள்களை லொறிகளில் ஏற்றிப் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பி வருகின்றனர்.

யாழ்ப்பாணம் கோட்டையைச் சுற்றியுள்ள நீதிமன்றம், காணிக்கந்தோர், தபால்கந்தோர், தொழில்கந்தோர், கூட்டுறவுத்தலைமைக்காரியாலயம், இறைவரித்திணைக்களம், தொலைசதொடர்பு பரிவர்த்தனை நிலையம் ஆகியவற்றிற்கு ஊழியர்கள் செல்லாததினல் இருதினங்களாக அவை செயலிழந்துள்ளன.

கோட்டைக்குச் சமீபத்திலுள்ள யாழ். மத்திய கல்லூரி வேம்படி மகளிர் கல்லூரிகளில் சில தினங்களாக மாணவர் வரவு வெகுவாக குறைந்ததினல் வகுப்புக்கள் ஒழுங்காக நடைபெறவில்லை. நேற்றைய தினம் காலை 10 மணியுடன் நகரிலுள்ள கல்லூரிகள் யாவும் மூடப்பட்டன.

நான்கு தினங்களாக யுத்தகளமாகக் காட்சியளிக்கும் நகரின் வீதிகளில் சனநடமாட்டத்தை காணமுடியவில்லை. வர்த்தக நிலையங்களும் நான்கு தினங்களாக திறக்கப்படவில்லை. பஸ் சேவைகள் ஒழுங்கில்லை.

அத்துடன் நான்கு நாட்களாக தீவுபகுதி போக்குவரத்தும் நடைபெறவில்லை.

யாழ். பண்ணை புதிய பொலிஸ் விடுதிகளில் இராணுவத்தினர் தங்கியிருப்பதால் இப்பகுதியிலிருந்து மக்கள் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

கொட்டடிப் பகுதியிலுள்ள மக்கள் அனைவரும் இருப்பிடங்களைவிட்டு வெளியேறியுள்ளனர்.

கொட்டடியிலிருந்து வெளியேறிய குடும்பங்கள் பாடசாலைகளிலும். கோவில்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். நேற்றிரவு சில குடும்பங்கள் அலுப்பாந்தி இறங்குதுறையிலிருந்து படகுகள் மூலம் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லமுற்பட்ட போது எதிர்புறத்திலிருந்து வெடிச்சத்தம் கேட்டதால் பயணத்தை நிறுத்திக்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

புதன்கிழமை 21-5-86


# வடக்கை மீட்கும் ராணுவ முயற்சி வெற்றியளிக்கவில்லை

## — தூரதர்ஸன் செய்தி

(சென்னை)

இலங்கையின் வடபகுதியை தமிழ்த் தீவிரவாதிகளிடமிருந்து கைப்பற்ற இலங்கை ராணுவம் எடுத்த முயற்சிகள் அவ்வளவாக வெற்றியளிக்கவில்லை என 'ராய்ட்டர்' செய்திஸ்தாபனத்தை மேற்கோள் காட்டி 'தூரதர்ஷன்' நேற்றுத் தெரிவித்தது.

வடபகுதியை நோக்கி முன்னேறிய ராணுவத்தினரை தமிழ்த்தீவிரவாதிகள் எதிர்த்துப் பின்வாங்கச் செய்தனர் என அரச அதிகாரியொருவர் தெரிவித்ததாக மேலும் அச்செய்தி கூறுகிறது.

### தற்காலிக பின்வாங்கல்

''ராணுவத்தினர் கடந்த நான்கு நாட்களாக மேற்கொண்ட தாக்குதலை தற்காலிகமாக நிறுத்திக் கொண்டு பின்வாங்கி தமது முகாம்களுக்குச் சென்றனர் என்றும் இது ஒருதற்காலிகநடவடிக்கை என்றும் அந்த அரச அதிகாரி தெரிவித்ததாக 'தூரதர்ஷன்' தெரிவித்துள்ளது.

### ஆனையிறவிலிருந்து பளைவரை

''சுமார் 1000 ராணுவத்தினரைக் கொண்ட படையொன்று ஆனையிறவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப்புறப்பட்டதாகவும், அவர்கள் யாழ். நகரிலிருந்து 30 கி மீ தூரத்திலுள்ள பளைவரை முன்னேறியதும் தீவிரவாதிகளின் எதிர் தாக்குதலால் மேலும் பின்வாங்க நேரிட்டது.

''கடந்த நான்கு நாட்களாக இடம்பெற்ற மோதலில் 10 கடற்படையினரும், 5 அதிரடிப்படையினரும் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. அத்துடன் ராணுவ ஜீப்வண்டி சேதப்படுத்தப்பட்டுள்ளது. விமானத்தாக்குதலில் 60 முதல் 90 வரையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் அல்லது காயமடைந்துள்ளனர்.

நேற்று யாழ் நகர் நோக்கி ராணுவத்தினர் பல முனைகளில் முன்னேறிக் கொண்டிருந்ததாகவும் அவர்களை எதிர்த்துத் தமிழ்த் தீவிரவாதிகள் கடுமையான தாக்குதல்களை நடத்தியதாகவும் வெடிகுண்டு கண்ணிவெடித் தாக்குதல் இடம்பெற்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன,

### தாக்குதல் நோக்கம்

கடந்த நான்கு நாட்களில் ராணுவம் நடத்திவரும் தாக்குதல்கள் பிரதான வீதிகளில் புதைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றவும், யாழ் நகரை தமிழ்த்தீவிரவாதிகளின் பிடியிலிருந்து விடுவிக்கவும் நடத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்றது பெரிய ஒரு தாக்குதல் என்ற கூற்றை தேசிய பந்தோபஸ்து அமைச்சரகம் மறுத்துள்ளது

ராணுவத்தினர் பெரும் தாக்குதலுக்குள்ளான நிலையில் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க விமானத்தாக்குதல் நடத்தப்பட்டதென்றும் பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். சமீபத்தில் நடந்த தாக்குதல்களினால் 22 பேர் கொல்லப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். ''இதனிடையே நேற்றுமுன்தினம் நடைபெற்ற தாக்குதலினால் 3 பேர் கொல்லப்பட்டதாகவும் சுமார் 90 பேர் வரை காயமடைந்திருக்கலாம். எனவும் வேறு செய்திகள் கூறுகின்றன.

### ஆஸ்பத்திரி பாதிப்பு

''இத்தாக்குதலில் ஆஸ்பத்திரியொன்று பாதிக்கப்பட்டதாகவும் இதில் 10 நோயாளிகள் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது. அத்துடன் சில கடைகளும் தீக்கிரையான தெரிவிக்கப்பட்டது.

### மக்கள் நடமாட்டம் இல்லை

இத்தாக்குதல்களைத் தொடர்ந்து யாழ் நகரம் நெருக்கடி நிலையை அடைந்துள்ளதாகவும் தெருக்களில்மக்கள் நடமாட்டம் இல்லையெனவும் செய்தியில் தெரிவிக்கப்படுகிறது.

---

## அவசரகாலநிலை நீடிப்பு

[கொழும்பு]

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், அவசரகால விதிகளை நீடிக்கும் பிரேரணை நேற்றுப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது

அரசாங்கப் பாராளுமன்ற அங்கத்தவர் அனைவரும் இப்பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர். சுதந்திரக்கட்சி வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை, [செ]

---

## 5 பொலிஸார் பலி; 9 பொலிஸார் காயம்

(மட்டக்களப்பு)

கல்குடா வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொலிஸ் வாகனக்கண்ணிவெடிச்சம்பவத்தில் 5 பொலிசார் பலியானார்கள். மற்றும் 9 பொலிசார் படுகாயமுற்றார்கள். பொலிசார் சென்ற வாகனம் முற்றாகச் சேதமடைந்தன.

இக்கண்ணிவெடிச் சம்பவத்துக்கு உரிமைகோரித் தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் மேற்குறிப்பிட்ட விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. [மா]

---

## வடமராட்சி ஷெல் தாக்குதல்: எண்மர் காயம்

[புலோலி]

வடமராட்சிப்பகுதியில் நேற்று நடைபெற்ற ஷெல் தாக்குதல்கள், ஹெலிகொப்டர் தாக்குதல்களினால் காயங்களுக்குள்ளாகி எழுபேர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். கடுமையான காயங்களுக்குள்ளான திருமதி அரியரட்னம் என்பவர் உடனடியாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த செல்வன் எஸ் ஈழம், (வயது 20) கம்பர்மலையைச் சேர்ந்த கே. வடிவேலு, ஆதிகோவிலடியைச் சேர்ந்த எஸ்.பால்வண்ணம் [வயது16] வாடியடியைச் சேர்ந்த எம். பாலசுப்பிரமணியம் (வயது 50) வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருமதி கே. அரியரட்ணம். யூனியன் வீதியைச் சேர்ந்த குகதாஸ் உதயலட்சுமி (வயது 29]. குகதாஸ் நர்மதா (வயது 5) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்

இரண்டு நாட்களாக வடமராட்சிப்பகுதியில் ஷெல் தாக்குதல்களும், ஹெலிகொப்டர் தாக்குதல்களும் இடம்பெற்று வருகின்றன. பொது மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

---

## இன்றுகூடி ஆலோசிப்பர்

(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் கல்விபற்றியும் காணாமல்போனவர்கள் பற்றியும் ஆலோசிப்பதற்காக வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் சகல ஆசிரியர்களையும் இன்று காலை 8 மணிக்கு உரும்பிராய் சைவ வித்தியாசாலைக்கு வருமாறு அதிபர் அறிவித்துள்ளார். (க)

---

## யாழ். குண்டு வீச்சு: லலித் மறுப்பு!

[கொழும்பு]

இலங்கை விமானப்படையினர் நேற்றுமுன்தினம் யாழ் நகரில் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தினர் என்பதனை தேசிய பந்தோபஸ்து அமைச்சர் மறுத்துள்ளார.

இதுபற்றிப் பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அமைச்சர் ''இவ்விஷயத்தில் வெளிநாட்டு அரசாங்கம் ஒன்று நேற்று வெளியிட்ட அறிக்கையில் பல தவறுகள் காணப்படுகின்றன. யாழ். ஆஸ்பத்திரி குண்டுவீச்சினால் தகர்க்கப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது, இது தவறானது எனக் கூறினார்.

இதனிடையே கொழும்பில் கூட்டுப்படைகளின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாடொன்றில் உரையாற்றிய பேச்சாளர் ஒருவர் யாழ். குண்டுவீச்சை மறுத்தாராயினும் பின்னர் பத்திரிகையாளரின் கேள்விக்கணைகளினால் இதனை ஏற்றுக்கொண்டார் எனத் தெரியவருகிறது. எனினும் பின்னர் கூட்டுப்படை அலுவலகத்தின் உயரதிகாரிகள் இந்தப் பேச்சாளரின் கூற்றை மறுத்து அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

---

## வல்வையில் நேற்று...

[வல்வெட்டித்துறை]

வல்வெட்டித்துறைப் பகுதியில் பொதுமக்களின் இருப்பிடங்களை நோக்கி நேற்று இரு பீரங்கிப் படகுகளில் இருந்து குண்டுகள் ஏவப்பட்டன; ஹெலிகொப்டரிலிருந்தும் சரமாரியாக ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதனால் பல வீடுகள் பலத்த சேதமடைந்தன.

இச்சம்பவத்தின்போது போராளிகள் மும்முரமாக எதிர்த் தாக்குதல் நடாத்தினர்.

நேற்றுக்காலை தொடக்கம் நண்பகல்வரை இந்த மோதல் நீடித்தது இதில்காயமடைந்த ஐராங்கனி(30வயது) என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

போராளிகள் பீரங்கிப் படகை நோக்கி 'ரொக்கற் லோஞ்சர்'ரால் அடுத்தடுத்துத் தாக்குதல் மேற்கொண்டதால் அப்படகு பலத்த சேதமடைந்ததாகக்கூறப்படுகிறது ஹெலிகொப்டரை நோக்கியும் போராளிகள் நவீனரக ஆயுதங்களால் எதிர்த்தாக்குதல் நடாத்தினர். இத்தாக்குதலைத் தொடர்ந்து ஹெலிகொப்டர் அப்பகுதியிலிருந்து பலாலி முகாமை நோக்கிப் பறந்து சென்றது (மா)

---

## ஆத்மானந்தன் எங்கே?

[யாழ்ப்பாணம்]

வசாவிளான் சந்தியால் இரவு நேரம் சென்ற இருவரில் ஒருவரின் சைக்கிளில் துப்பாக்கிச் சூடு வீழ்ந்ததும் அவர் வேலிபாய்ந்து தப்பிவிட்டார். மற்றவரின் நிலைமை பற்றி இதுவரை தெரியாததால் அவரது மனைவி இது பற்றி யாழ். அரசஅதிபருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

கடந்த ஞாயிறு இரவு 7 மணிக்கு அராலி வடக்கைச் சேர்ந்த பொன்னையா ஆத்மானந்தன் (வயது 36) என்பவரும் மூளாய் தமிழ்வித்தியாலய ஆசிரியர் முருகையா என்பவருமாக சைக்கிளில் வசாவிளான் சந்தியால் சென்று கொண்டிருந்த சமயம் திடீரென துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டதாம். முருகையா சைக்கிளை நிலத்தில் போட்டுவிட்டு வேலிபாய்ந்து ஓடினாராம். ஆனால் ஆத்மானந்தனுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.

ஆத்மானந்தன் வீடுதிரும்பாததினால் அவரின் மனைவி திருமதி ஆத்மானந்தன் சரஸ்வதி தமது கணவரின் நிலை பற்றி இராணுவத்தினருடன் தொடர்பு கொண்டு தமக்குத் தெரிவிக்கும்படி யாழ் அரசாங்க அதிபரை நேற்றுக் கேட்டுள்ளார்.

ஆத்மானந்தன் இருகுழந்தைகளின் தந்தையாவார். ஐ)

---

## மீண்டும் வள்ளச்சேவை

[பூநகரி)

பூநகரி இராணுவத்தினரால் தடைசெய்யப்பட்டிருந்த சங்குப்பிட்டி - கேரதீவு வள்ளச்சேவை நேற்று நண்பகலிலிருந்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இம்மாதம் 17-ம் திகதி வேலணை ஆயத் துறையில் கடமையில் ஈடுபட்டிருந்த ப நோ கூ சங்க ஊழியர்கள் அனைவரும் பூநகரி இராணுவத்தினரால் கூட்டிச் செல்லப்பட்டு நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

---

## யாழ். பல்கலை மாணவர் நேற்று பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரால் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயமும், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியும் கைப்பற்றப்பட்டதையும் வசாவிளான் வித்தியாலய மாணவிகளையும் ஊழியர்களையும் தடுத்து வைக்கப்பட்டதையும் கண்டித்து யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று நண்பகல் 12 மணியிலிருந்து வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர்.

மேலும் வைத்தியசாலைகள் மீது ராணுவத்தாக்குதல்இடம் பெற்றதைக்கண்டித்து வைத்தியபீடமாணவர்களும் தமது வகுப்புகளை நேற்றுப் பகிஷ்கரித்தனர்

இதுவரைகாலமும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் பல்வேறு தரத்திலுள்ள பாடசாலைகள் இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்டும், மாணவர்கள், ஆசிரியர்கள் தாக்கப்பட்டும் கைது செய்யப்பட்டுமுள்ளார்கள் என்று யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## தென்மராட்சி, பளை பகுதிகளில் ஹர்த்தால்

[கிளிநொச்சி]

இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக தென்மராட்சியிலும் பளைப்பகுதியிலும் நேற்று முன்தினம் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள், கைதடி, பளைப்பகுதியில் கடைகள், தொழிற்சாலைகள் எல்லாம் பூட்டப்பட்டன

கறுப்புக்கொடிகள் சந்திகள் தோறும் பறக்கவிடப்பட்டிருந்தது. போக்குவரத்தும் நடைபெறவில்லை.

---

## மரண அறிவித்தல்

### செல்லப்பா கனகசபை

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த (இளைப்பாறிய முன்னைநாள் சாக்குவில் இந்துக்கல்லூரி ஆரம்ப பாடசாலை அதிபர்), திரு. செல்லப்பா கனகசபை காலமானார். இவர் நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், ஸ்ரீபதி இலங்கை வங்கி, திருகோணமலை) ஜெயபதி, ஆகியோரின் அன்புத் தகப்பனுருமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் செவ்வாய்க்கிழமை (21 - 5 - 86) இன்று 11-00 மணிக்கு கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் காரைக்கால் மயானத்தில் நடைபெறும்.

தகவல்: ஸ்ரீபதி

(C 2434)

---


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு மே மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org